J.M.C-N

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Sri Lanka*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வலம்புரி

# Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 14 வெள்ளிக்கிழமை (27.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

# புலிகளின் விமானம் குறித்த வதந்தியால் கட்டுநாயக்காவில் நேற்று இரவு பரபரப்பு

## வான் நோக்கித் தாக்குதல்; மின்சாரம் துண்டிப்பு

(கொழும்பு)

புத்தளப்பகுதியில் நேற்றிரவு 10.45 மணியளவில் இரு விமானங்கள் செல்வது அவதானிக்கப்பட்டதனையடுத்து கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வான் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு 10.45 மணியளவில் இனந் தெரியாத இரு சிறிய ரக விமானங்கள் புத் தளப்பகுதியில் பறப்பதாக சிங்கள மீனவர் களால் அவதானிக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் வழங்கப் பட்டுள்ளது. அவ் விமானங்கள் விடுதலைப் புலிகளினுடையது என அச்சமடைந்து அவை கட்டுநாயக்கா விமான நிலையத்தை தாக்க வருவதாக எண்ணிய விமானப்படை யினரால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மின்சாரம் நிறுத்தப்பட்ட பின் வான் நோக்கி தொடர்ச்சியான தாக்குதல் நடத்தப்பட்டது. உடனடியாக தானியங்கிக் கருவிகளும் செயற்படுத்தப்பட்டன. (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வெற்றி தீர்வாகாது

## இணைத்தலைமை நாடுகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளது ஏட்டிக்குப் போட்டியான இராணுவ ரீதியான அணுகுமுறை பெரும் கவலை அளிக்கிறது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இராணுவ ரீதியான வெற்றிகள் ஒருபோதும் உதவப்போவதில்லை என இணைத் தலைமை நாடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

வட பகுதி நோக்கி இராணுவம் படை நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக வெளியான செய்திகுறித்து கருத்துத் தெரிவித்த போது இணைத்தலைமை நாடுகளின் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் போட்டியை பார்வையிட ஜனாதிபதி பாபடோஸ் பயணம்

(கொழும்பு)

உலகக் கிண்ண இறுதிப் போட்டியைப் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பாபடோஸ் பயணமானார். பாபடோஸ் பிரதமரின் அழைப்பையேற்று செல்லும் ஜனாதிபதியுடன் 10 பேர் அடங்கிய குழுவொன்றும் சென்றுள்ளது.

நாளை பாபடோஸ் கென்சின்ரன் மைதானத்தில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் உலகக் கிண்ண இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலங்கை அணியினருக்கும் உற்சாகத்தையும் மன உறுதியையும் வழங்கும் முகமாகவே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ச-5)

## சரணடைந்திருந்த 36 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில மாதங்களுக்கு முன்பு உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்து யாழ்.சிறையில் தடுத்துவைக் கப்பட்டிருந்த 36 பேர் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

## புங்குடுதீவில் மீட்கப்பட்ட சடலம் உதவியாளர் விமலதாசனுடையதா?

### குற்றப்புலனாய்வுத்துறை சந்தேகம்

## விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று விமானத் தாக்குதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. மக்கள் குடியிருப்புக்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை கிளிநொச்சி நகரில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் ஒன்று கூடும் இடமென அடையாளம் காணப்பட்ட நிலை ஒன்றின் மீது நேற்றுக் காலை இலங்கை விமானப்படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## உதவியாளர் விமலதாசனுடையதா?

## குற்றப்புலனாய்வுத்துறை சந்தேகம்

(கொழும்பு)

புங்குடுதீவில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட சடல எச்சம் அல்லைப் பிட்டி பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய திருச்செல்வம் நிஹால் ஜீம்பிறவுணின் உதவியாளரான விமலதாசனுடையதாக இருக்கலாமென குற்றப்புலனாய்வுத்துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் இச் சடல எச்சத்துக்கான மரபணுப் பரிசோதனைக்காக விமலதாசனின் தந்தை மற்றும் சகோதரர்களின் இரத்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கிய பிரதிநிதி அமெரிக்காவில் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய பிரதிநிதி ஒருவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. கருணா எனப்படும் கருணாகரன் கந்தசாமி என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அமெரிக்காவில் விடுதலைப்புலிகளின் முக்கிய ஏற்பாட்டாளராக திகழ்ந்துள்ளார். இவர் நியூயோர்க் குயின்ஸ் பகுதியில் வைத்து கைது (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி விமானத் தாக்குதலுக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் நேற்று நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு;

கிளிநொச்சி நகரை அண்டிய பொதுமக்கள் செறிந்து வாழும் திருவையாறு என்னும் இடத்தில் நேற்றுக் காலை 7.15 மணியளவில் மிக் விமானங்கள் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இத் தாக்குதலின்போது ஒரு வீடு தரைமட்டமாக அழிக்கப்பட்டுள்ளதுடன் சண்முகநாதன் சிவசக்தி (வயது 26), வட்டன் சின்னத்தம்பி (வயது 69) ஆகிய இரண்டு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலின்போது வீசப்பட்ட குண்டுகளில் 12 (04 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் சித்தாண்டி பகுதியில் விடுதலைப்புலிகளிற்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றுள்ளது. இதில் பொதுமகன் ஒருவர் பலியாகியுள்ளதாகவும் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் சித்தாண்டி காவலரணுக்கு அருகில் நேற்று காலை 7 மணியளவில் இம் மோதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

## பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் சம்பள நிலுவையை வழங்க திறைசேரி நிதி

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளில் 50 சதவீதத்தை வழங்குவதற்கென திறைசேரி,நிதி வழங்கியிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கு அமைய 15 கோடி 40 இலட்சம் ரூபா பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சம்பளம் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவின் அறிக்கையினை மீளாய்வு செய்ததன் பின்னர் இரண்டு மாத காலத்திற்குள் மிகுதி 50 சதவீதமும் வழங்கப்படுமென (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.ஒன்றிய நாடாளுமன்றில் அறிக்கை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரசாரத்திற்கு பிரித்தானியாவின் மூன்றாவது பெரும் கட்சியான லிபறல் டெமோகிறட்ஸ் என்றழைக்கப்படும் தாராண்மைவாத ஜனநாயகக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கிந்தியத் (04 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

# தென்னாபிரிக்காவை அரையிறுதியில் அசத்தலாக வென்றது அவுஸ்திரேலியா

## இறுதிப் போட்டியில் நாளை இலங்கையுடன் மோதவுள்ளது

தென்னாபிரிக்காவை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தி தொடர்ச்சியாக 4-வது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது அவுஸ்திரேலிய அணி. மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் சென். லூசியாவில் நடைபெற்ற 2-வது அரையிறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா-தென்னாபிரிக்க அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவின் வேகப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சில் 43.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 149 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் ஜஸ்ரின் கேம்ப் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் ஹேர்சல் கிப்ஸ் 39 ஓட்டங்களையும் வில்லியஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் இரட்டை இலக்கைக் கூட அடையவில்லை. பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஹோான் தைட் 4 விக்கெட்டுக்களையும் கிளேன் மெக்ராத் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மைக்கல் கிளாக், மத்தியூ ஹைடன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 31.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 153 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் மைக்கல் கிளாக் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும் மத்தியூ ஹைடன் 41 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மெக்ராத் தெரிவானார்.

இவ் வெற்றியுடன் அவுஸ்திரேலிய அணி 4-வது முறையாக தொடர்ச்சியாக உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்குள் நுழைகிறது.

இறுதிப் போட்டியில் இலங்கை அணியுடன் மோதவுள்ள அவுஸ்திரேலிய அணி, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை அணியுடன் போட்டியிட்டு தோல்வியடைந்து உலகக் கிண்ணத்தையிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அவுஸ்திரேலிய அணியின் மத்தியூ ஹைடன், ரிக்கி பொன்டிங் ஆகியோர் தொடர்ச்சியாக 4-வது உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆடுவதன் மூலம் சாதனை படைத்துள்ளனர்.

இச் சாதனையை இதுவரை எவரும் நிகழ்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சர்வதேச போட்டியிலிருந்து ஆர்னொல்ட் ஓய்வு பெறுகிறார்



உலகக் கிண்ணத் தொடருடன் இலங்கை அணியின் மத்திய தரவரிசை துடுப்பாட்ட வீரர் ரசல் ஆர்னொல்ட் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

33 வயது நிரம்பிய ரசல் ஆர்னொல்ட் இலங்கை அணிக்கு பல வெற்றிகளைத் தேடித் தந்துள்ளார். இவர் நாளை நடக்கவுள்ள இறுதிப் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். 1997 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிரான ரெஸ்ட் போட்டியில் அறிமுகமான இவர், இதுவரை 44 ரெஸ்ட்டில் ஆயிரத்து 821 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 179 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 3 ஆயிரத்து 949 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் சுழல்பந்து வீச்சாளருமாவார். (ச-5)


அனுசரணை:-

குறுகியகால வைப்புக்களுக்கு

மக்கள் வங்கி வழங்கும் விசேட வட்டிவீதம்

மக்கள் வங்கியில் ரூபா 10இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 18% வட்டியும், ரூபா 100 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 20% வட்டியும் விசேட வட்டியாக வழங்கப்படவுள்ளது. இச் சலுகை 19.04.2007 இலிருந்து 30.04.2007 வரை மட்டுமே...

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி


## திருமஞ்சன பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நவிண்டில் அருள்தரு ஸ்ரீ சுந்தர ஐயப்ப ஆஞ்சநேயர் திருக்கோவில் திருக்குட திருமஞ்சனப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## குடும்பஸ்தர் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

ஆயுதாரிகளினால் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக உறவினர்களினால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாதகல் கேணியடியைச் சேர்ந்த செல்லத்துரை தவரட்ணம் (வயது-48) என்பவருடைய வீட்டிற்கு சிவில் உடையில் முகத்தைக்கறுப்புத் துணிகளால் கட்டியவாறு நுழைந்த 10ற்கும் மேற்பட்ட ஆயுததாரிகளால் அவர் கடத்திச் செல்லப்பட்டதாக அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## இரா.சுந்தரலிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் வட மாநில கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கத்தின் மறைவை ஒட்டிய நினைவஞ்சலிக் கூட்டம் நாளைக் காலை 9.30 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.சோதிப் பெருமாள் தலைமையில் நடைபெறும் இவ் அஞ்சலிக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ரு)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற யோ. ஜோன்ஸன் ராஜ்குமார் எழுதிய 'கொல் ஈனுங் கொற்றம்' கூத்துருவ நாடக நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு டேவிற் வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைக்கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர் கலாபூசணம் ஜி.பி.பேர்மினஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-3)

# பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க சவுதிஅரேபியா ஒத்துழைப்பு

## வெளிவிவகார அமைச்சுத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க சவுதிஅரேபியா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என சவுதி அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த திங்களன்று சவுதிஅரேபியா சென்றடைந்த வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம, மறுநாள் சவுதிஅரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் சவுத்அல் பைஸாலைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இன்றைய நிலை பற்றியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றியும் இப்பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் தயாராகவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். புதிதாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மிஹின் ஏயார் விமான சேவைகள் பற்றியும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது அமுலில் உள்ள விமானப் போக்குவரத்து உடன்படிக்கைக்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளவும் இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (எ-5)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

ஆசிரியத்துவமும் பால்நிலை அறிகையும் நூல் அறிமுக விழாவும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு அகவிழி யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு,

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ச)

# பூமியை ஒத்ததான புதிய கோள் கண்டுபிடிப்பு

(ஜெனீவா)

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பூமியை ஒத்த கோளை அண்டவெளியில் கண்டு பிடித்துள்ளார்கள். அந்தக் கோள் தனது மேற்பரப்பில் நீரைக் கொண்டிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சூரிய மண்டலத்திலிருந்து 20.5 ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள ' கிலியஸே 581' நட்சத்திர நீள்வட்டப் பாதையைச் சேர்ந்தது இந்தக் கோள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

சிலியில் ஈஸோ 3.6எம் தொலைக்காட்டியைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் இந்தக் கோளைக் கண்டறிந்துள்ளனர். இக் கிரகத்தில் நிலவும் வெப்பநிலையானது நீர்த்திரவ ரூபத்தில் இருக்கக் கூடும் என்பதை நிரூபித்துள்ளதாகவும் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளும் இக் கிரகத்தில் உள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



இக் கோளில் 0 பாகையிலிருந்து 40 பாகை செல்சியஸ் அளவான வெப்பநிலை நிலவுவதால் அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என ஜெனீவா விண்வெளி ஆராய்ச்சியாளர் ஸ்ரீபன் உட்றி தெரிவித்தார்.

அத்துடன் பூமியை விட 1.5 மடங்கு அதிகமாகக் கதிர்ப்புத் தன்மையை இக்கோள் கொண்டுள்ளது.எனவே இக்கோளில் பூமியைப் போன்று கடலால் சூழப்பட்ட பாறைகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இக்கோளானது பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரத்தை விட 14 மடங்கு தனது நட்சத்திரத்தை அண்மித்து காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

தந்தை செல்வாவின் சதுக்கத்தில் நேற்று காலை நடைபெற்ற தந்தை செல்வநாயகத்தின் 30-வது ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வில் சமயத் தலைவர்கள் கலந்துகொண்டுநினைவு உரை நிகழ்த்துவதனையும் இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.




திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விடேசட வைபவங்கள்
- சுற்றுலாக்கள் போன்ற அனைத்துச் சேவைகளுக்கும், புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட)

குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்பு ரட்ணம், சோமசுந்தரம் அவன்யூ, சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

T.P: 0777903090,0777246117

மனிதனுக்கு நிகழ்காலந்தான் சொந்தம். அதையும் அவன் இழந்து விடுகிறான்.

-ஒளரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

# அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் பயன் தராத கோரிக்கை

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டுமென அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராக இருக்கக் கூடிய திஸ்ஸ விதாரண, யதார்த்தமான கருத்துக்களை வெளியிட்டு வருபவர் என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டத்தை அரசியல் கட்சிகள் முன்வைக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்திருந்தாலும், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் எதுவென்பதை அரசியல் கட்சிகள் தெரிந்திருப்பது அவசியமாகும்.

அவ்வாறாயின் சர்வகட்சிப் பிரநிதிகள் குழுவில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் அது நடக்கவில்லை.

தமிழ் மக்களின் பிரநிதிநிதிகள் கலந்து கொள்ளாத சர்வகட்சிக் கூட்டத்தில் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகளில் இதனையே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்ற முடிபை எடுப்பது யார்? என்பது சிக்கலானதாகவே இருக்கும்.

அதாவது தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க முடியும்.

ஆனால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில், கட்சிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளிலிருந்து தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வையும் சிங்கள மக்களின் பிரதிநிதிகளே தெரிவு செய்வர்.

சுருங்கக் கூறின் சிங்கள மக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு அவர்களால் தெரிவு செய்யப்படுகின்ற யோசனைகள் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என்ற அடிப்படையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சிப் பிரதிநிதிகளின் தீர்வு யோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.

இதை மேலும் ஒருபடி தெளிவுபடுத்துவதாயின், சிங்களப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு, அவர்கள் வாக்குவாதம் நடத்தி, அதிலிருந்து எந்த எதிர்ப்புமற்ற தீர்வுத் திட்டத்தை தெரிவு செய்து முன்வைக்கப்படும் போது அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே சர்வகட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மாநாட்டின் நோக்கமாகும்.

ஆக, தீர்வுயோசனைகளில் பங்கேற்க தமிழ் மக்களுக்கு எந்தச் சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. அதைவிட சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில் தனித்து சிங்கள மக்களின் பிரதிநிதிகள் மட்டும் கலந்து கொண்டு தீர்வு யோசனையைத் தயாரிப்பது என்பது இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நாம் வழங்குவதை அவர்கள் ஏற்றாக வேண்டும் என்பதை உறுதி செய்கின்றது.

எனவே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் என்ற திஸ்ஸ விதாரணவின் கோரிக்கையினால் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பது உறுதி.

# கால்நடைத் தீவனத் தட்டுப்பாட்டால் யாழ்ப்பாணப் பண்ணையாளர்கள் பாதிப்பு

யாழ்.குடாநாட்டில் கால்நடைத் தீவனங்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அபிர்தலிங்கம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கால்நடைத் தீவனங்களை அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களூடாக விநியோகிக்கப்பட்டது.

தற்பொழுது இத் தீவனங்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதுடன் சில பிரதேசங்களில் உயர் விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. முட்டையின்விலை 18ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்ட போது இத்தீவனங்களின் தட்டுப்பாட்டினால் முட்டை விலை 25 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என அவர் கூறினார்.

கால்நடைத் தீவனங்கள் பற்றாக்குறையினால் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல வேறு முறைப்பாடுகள் கிடைத்தன. அம்முறைப்பாடு தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும் அதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை பண்ணையாளர்களுக்கு இலவசமாகக் கல்சியப் பவுடர் மற்றும் முட்டையிடும் கோழிகளுக்கான கனி உப்புஎன்பன பிரதேசங்களிலுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடக வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச-3)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம்

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்திப் பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

இவ் அபிவிருத்திப் பணிக்குரிய காலங்கள் முடிபடைந்துள்ள நிலையில் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் நீடிப்பது தொடர்பாக எவ்வித உறுதியான தகவல்களும் அந்நிறுவனங்களினால் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த குளங்கள் மற்றும் வடிகால் புனரமைப்புக்களில் சில முடிபுறும் நிலையிலும் மற்றயவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளதுடன் தற்போது கைவிடப்பட்ட நிலையிலும் உள்ளது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குடாநாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையின் பின் பொருள்களின் விலை உயர்வினை காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகள் யாவும் கடந்த 8 மாதங்களாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளதாக ஆணையாளர் மேலும் கூறினார். (ச-3)

# அரசாங்க ஊழியர்களுக்கான சுனாமி கடன்திட்டம் நிறுத்தம்

அரசாங்க ஊழியர்களுக்கு நான்கு வீத வட்டியுடன் வழங்கப்படும் சுனாமி சலுகைக் கடன் திட்டம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்லாயிரக் கணக்கான அரச ஊழியர்கள் விரக்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஒரேயொரு கடன் திட்டமான இத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதால் ஏனையோர் பெறும் சலுகைகளையும் பெறாது தமக்குரிய சலுகையையும் பெற முடியாத இக்கட்டான நிலை அரச ஊழியர்களுக்கு எழுந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களில் 50 வீதமானோரே இக் கடனைப் பெற்றுள்ளனர். இவர்களில் பாதிக்கப்படாத ஊழியர்களும் அடங்குவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் அரச ஊழியர்கள் என்ற காரணத்திற்காக எந்த நிவாரணமும் கிடைக்கப் பெறாமல் பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த பலர் ஏமாற்றத்துடன் என்ன செய்வதென்றறியாமல் அலைகின்றனர். (ச-5)

# வெளிவாரியாக கலைமாணிப் பட்டம் பெறும் 217 மாணவர்களின் பெறுபேறு வெளியானது

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால் 2002 ஆம் ஆண்டுக்கான கலைமாணிப் பட்டம் பெறும் 217 மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அவ் மாணவர்களின் விபரம் வருமாறு,

எஸ்.பவானி, ஆர்.கல்பனா, கே.கலாமோகன், ஆர்.இந்துமதி, பி.தியாகராஜா, ஜி.இந்திராணி, எஸ்.கலைச்செல்வி, எஸ்.கலையரசி, என்.கவிதா, எஸ்.மரியடெய்சி, எஸ்.நாகேஸ்வரி, எஸ்.நளினி, கே.நந்தினி, என்.பிரியதர்சினி, கே.ரஜீவன், என்.ரூபதன், எஸ்.திருஞானசம்பந்தர், பி.சர்மினி, ரி.சத்தியரூபன், ஆர்.சுகுனேஸ்வரி, கே.வைகுந்தராஜா, கே.சிவனருட்செல்வி, பி.உஷாநந்தினி, ரி.தவறூபன், வி.துவாரகன்,

ஜே.மரிஸ்ரலா, எஸ்.சுபாஜினி, கே.மதிவதனி, எல்.ஏன்சலின் மேகலா, எஸ்.கல்யாணி, பி.வசந்தன், எஸ்.மஞ்சுளா, எஸ்.விஜிதா, எஸ்.சிவகரன், எம்.கௌரி, ஜி.ஸ்ரீகணேஷ், என்.பரமேஸ்வரன், எஸ்.சிவசாந்தினி, டி.பாலசுப்பிரமணியம், எஸ்.சிவதேவன், எஸ்.சசிரேகா, ஆர்.சுமதி, எஸ்.அமுதா, கே.அம்பிகா, ஏ.அமுதசுரபி, சி.அன்ரன்ஜெயராஜ், பி.பாலாதேவி, கே.பாலமோகன், என்.பிருந்தா,

எஸ்.கௌரி மனோகரி, ஜி.கௌரிஸ்வரி, ரி.யசோதை, ரி.ஜெயந்தி, என்.ஜெயராஜா, எஸ்.கமலினா, எம்.காயத்திரி, எஸ்.கோகிலவதனி, எல்.குமணன், இ.குந்தவி, எஸ்.லதா, டி.மேரிஜேர்சப்பின், எம்.மதிதாஸ், கே.மதிவதனி, ரி.கார்த்திகா, கே.மயூரதி, என்.நவேதினி, எஸ்.கேதீஸ்வரி, எம்.நிஷாந்தினி, ரி.பகீரதன், பி.பேரின்பன், வில்சன் பிரியந்தன், கே.பவளமலர், கே.ராகினி,

எஸ்.ரஜனி, ரி.றஞ்ஜிதமலர், கே.ராதிகா, எஸ்.மகாலக்ஸ்மி, என்.சஜி, என்.சத்தியநிதி, எஸ்.சத்தியபாமா, ஜி.சிவகௌரி, பி.சிவாஜினி, கே.சுபாஜினி, எஸ்.பாவலன், கே.சுகந்தினி, ரி.சுதா, எஸ்.சுவர்ணா, கே.சுதர்ஷினி, எம்.சறோசா, ரி.சுபாஜினி, ரி.தமயந்தி, எஸ்.தாரணி, ரி.புவனேந்திரன், வி.தயாளன், எஸ்.தயாநிதி, எஸ்.திவ்யா, கே.உஷாநந்தினி, பி.உதயறஞ்சினி, கே.வாசுகி,

கே.விஜித்தா, வை.விமலன், ரி.வினோதினி, எஸ்.யோகேஸ்வரி, ஆர்.விஜிதா, பி.தேவறஞ்ஜினி, வி.யோககலா, எஸ்.பத்மநிதி, எம்.முருகன், ஏ.அனுஷமலர், கே.விஜிதா, கே.சிறிகோபிதரன், பி.இளநங்கை, எல்.ஜெயரதி, பி.பிருந்தா, எஸ்.சிவனேசன், எஸ்.கிருஷ்ணகுமாரி, எம்.பேறரி பண்ணிஸ்ரர், இ.நாகேந்திரராஜா,

எஸ்.பிறின்செலன், பி.வாசுதேவன், ஏ.அருட்செல்வி, ஏ.சாந்தி, கே.சிவச்செல்வி, வி.கஜேந்திரன், கே.யோகராஜா, வி.ஜெயவதனி, கே.தர்மஜீலன், ஆர்.சிவமணி, ரி.சுகந்தினி, கே.கற்பகசோதி, கே.சோதிரட்ணராஜா, ரி.சத்தியரூபன். (ச)

# வெள்ளி நற்சிந்தனை 15

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனிதன் வாழ்க்கையில் எந்தக் காரியத்தைச் செய்யப் புகினும் அதற்கேற்ற காலத்தை நோக்கிக் காத்திருக்க வேண்டும். பழைய புறநானூற்றுப் புலவர் ஒருவர், 'காலனும் காலம் பார்க்கும்' என்று பாடியுள்ளார். உலகப் பொது மறையாம் திருக்குறளும்,

'காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்' (குறள்:485)

எனக் கூறப்பட்டுள்ளது.

உலகம் முழுவதையும் கைப்பற்ற எண்ணும் அரசர்களை நோக்கிய கூற்றாக இக் குறள் அமைந்திருப்பினும் மக்கள் யாவருக்கும் ஏற்றதாகவே உளது. நமது செயல்களுக்கு ஏற்ற காலத்தை நோக்கிக் காத்திருக்க வேணடும் என்ற இக் கருத்து மனிதனின் வளர்ச்சி நிலைகளையும் உள்ளடக்கியே கூறப்பட்டுள்ளது.

இதனை இன்னொரு புலவர் மேலும் தெளிவாக விளக்கியுள்ளார். மக்களை நல்வழிப்படுத்தும் போது அவர்களைச் சூழவுள்ள இயற்கைத் தோற்றத்தைக் காட்டி வழிப்படுத்துவது நன்றென அப் புலவர் எண்ணினார். ஒருவர் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள மற்றவர் தயங்குவர். அவர் தயக்கத்தை நீக்க ஒரு எடுத்துக்காட்டு இன்றியமையாதது. இதனை நமது செம்மொழிப் புலவர் நன்குணர்ந்திருந்தார்.

மனிதனைச் சூழவுள்ள இயற்கை அவனுக்குச் சில கற்பித்தலைச் செய்கிறது. அவன் இயற்கையை நன்கு ஊன்றிக் கவனித்தால் இதனை நன்குணர முடியும். நெடுத்து வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் உடனடியாகப் பழம் தர மாட்டா. தகுந்த பருவகாலம் வந்த பின்னர்தான் பழத்தைத் தரும். இதனை மனிதன் தானே கண்டு உணர முடியும்.

இதுபோலவே மனிதன் செய்கின்ற முயற்சிகள் எல்லாம் கைகூடும் காலத்தில்தான் நிறைவேறும். அடிக்கடி முயற்சி செய்தாலும் நிறைவேறவில்லையே என அவன் வருந்துவதில் பயனில்லை. அதற்காகக் காலத்தை நோக்கிப் பொறுமையுடன் காத்திருப்பதே நல்லது. இந்த இயற்கை நிலையான உண்மையைப் புலவர் செய்யுளில் நிறுத்தியிருப்பது எமக்கு வழிகாட்டுகிறது.

'அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா' (மூதுரை-5)

# மேதின ஊர்வலத்தை ஐ.தே.க.நடத்தாது

ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை மே தினத்தை முன்னிட்டு எந்த விதமான தொழிலாளர் ஊர்வலங்களையும் கூட்டத்தையும் நடத்தமாட்டாது என்று கட்சியின் ஊடகப் பேச்சாளரும் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இம்முறை மேதினம் வெசாக் போயா தினத்தில் அமைந்துள்ளது. இந் நிலையில் பௌத்த மதத்தை கௌரவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி வெசாக் வாரத்தில் நாடு தழுவிய ரீதியில் மத வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி தொழிலாளர் தினத்தை மதிக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க எமது கட்சி தொடர்ந்து போராடும். இருப்பினும் இம்முறை தொழிலாளர் தினம் புனித வெசாக் தினத்தில் அமைந்துள்ளதால் நாங்கள் விசேட மத வழிபாடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி கம்பளையில் ஆரம்பமாகவுள்ளது. (எ-1)

# ரையூ கொக்கோ பல்கலைக்கழக பேராசிரியர் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து யப்பானிலுள்ள ரையூ கொக்கோ பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியர் நக்கமுறாவிற்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குடாநாட்டில் இன்றைய சூழ்நிலையில் மீன்பிடி அபிவிருத்தியினை கூட்டுறவு சங்கங்கள் ஊடாக முன்னெடுப்பது என்பன குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியிலுள்ள வலைப்பின்னல் தொழிற்சாலையினை சிறப்புடன் செயற்படுத்துவதற்கும், காரைநகர் பகுதியில் மீன்பிடியினை முன்னெடுப்பதற்குரிய உதவிகளினை வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரங்களில் நிறைவான ஈடுபாட்டினை 40 வருடங்களுக்கு மேலாக கொண்ட பேராசிரியர் நக்கமுறா தமிழிலும் சிங்களத்திலும் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர்.

இச் சந்திப்பின்போது யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவின் தலைவர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை அதன் செயலாளர் பரமநாதன், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் என்.தவரட்ணம் ,கரிதாஸ் கியுடெக் நிறுவனத்தின் இயக்குநர் வணபிதா ஜெயக்குமார் ஆகியோர் பங்குபற்றினர்.

இதேவேளை குடாநாட்டின் கரையோரப் பகுதிகளையும் பேராசிரியர் நக்கமுறா சென்று பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-3)

# இலங்கையில் தமிழ் ஊடகங்கள் நெருக்கடிக்கு ஆளாகின்றன

## சர்வதேச் பத்திரிகை நிலையம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஊடகவியலாளர்கள் மீண்டுமொரு முறை நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளதாக சர்வதேச ஊடக பத்திரிகை நிலையம் தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான சர்வதேச பத்திரிகை நிலையம் இவ்வாறு வெளியிட்டுள்ளது. வியனாவை தலைமையகமாகக் கொண்ட இந் நிலையம் 180 நாடுகளைப் பற்றிய ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 5 ஊடக வியலாளர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அது மாத்திரமல்ல ஊடகவியலாளர்களுக்கு எதிராக கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விசாரணை செய்யத் தவறியுள்ளதாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் ஊடகங்கள் மீது இவ் அச் சுறுத்தல்கள் பாரியளவு உட்படுத்தப்பட்டுள்ளது என்று அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்திற்கு வந்தால் தாம் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அர்ப்பணிக்கத் தயார் என தொழிலமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களை கண்டித்து நேற்று கொழும்புக் கோட்டையில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே மேர்வின் சில்வா இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.(ச-3)

## புலிகளின் விமானம் குறித்த...

இந் நிலையில் கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியிலிருந்த மக்களும் தமது வீட்டு மின்சாரத்தை அணைத்துவிட்டு பாதுகாப்புத் தேடி ஓடியதாகவும் வாகனங்களை நடுவீதியில் நிறுத்திவிட்டு சாரதிகள் தப்பியோடியதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. அதேவேளை கட்டுநாயக்கா வரவிருந்த சர்வதேச விமானங்கள் அனைத்தும் உடனடியாக வேறு இடங்களுக்கு திருப்பப்பட்டன.

கட்டுநாயக்காவிலிருந்தும் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற பதற்ற சூழ்நிலையடுத்து நிலைமை சீரடைந்ததாக விமானப்படைப் பேச்சாளர் அஜந்த சில்வா தெரிவித்தார்.

இதேவேளை புத்தளம் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டார்த் தாக்குதலையடுத்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் விமானங்களுக்கோ விமான நிலையத்திற்கோ எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (ச)

## சரணடைந்திருந்த...

செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் தம்மை விடுதலை செய்யுமாறு நீதிமன்றத்தைக் கோரியபோதும் அனைவரையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு சிறைச்சாலை தடுப்புக்காவலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.சிறை சாலையில் ஆறு அதிகாரிகளுக்கு அம்மை நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நூறு பேரை தடுத்துவைக்கக்கூடிய யாழ்.சிறைச்சாலையில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் அனைவருக்கும் அம்மை நோய் ஏற்படும் அறிகுறிகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## பல்கலைக்கழக...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதனையடுத்து சகல கல்விசாரா ஊழியர்களையும் வேலைக்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் நாடளாவிய ரீதியில் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## கிளிநொச்சி விமானத்...

குண்டுகள் வெடித்துச் சிதறியுள் என. இத் தாக்குதல் அச்சம் காரணமாக பாட சாலைகளுக்கு பெருமளவான மாணவர்கள் சமுகமளிக்கவில்லை.

மிக் ரக விமானங்கள் மீண்டும் காலை 10 மணியளவில் வன்னி வான் பரப்பினுள் வட்டமிட்டமையால் அவ் வேளையில் கிளிநொச்சி நகரில் ஒன்பது பாடசாலைகளில் கல்வி பயின்று கொண்டிருந்த பல்லாயிரம் மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கிளி.பொது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற 250 இற்கும் அதிக மானவர்களும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 300 இற்கும் அதிகமான நோயாளர்களும்,

கிளி.அரச அதிபர் அலுவலகம் உள்ளிட்ட அரச,அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அரசாங்க உயர் அதிகாரிகள் உட்பட பல்லாயிரக் கணக்கானவர்கள் பாதுகாப்பு அச்சம் காரணமாக தமது கடமைகளை இடையில் கைவிட்டு பாதுகாப்புத் தேடி ஓடும் நிலை ஏற்பட்டது.

அதேபோன்று சந்தை வியாபாரிகள் நகரிலுள்ள வர்த்தகர்கள்,பிரதேசத்தில் குடியிருக்கும் பொதுமக்கள் என அனைவரும் சிதறியோடும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

தமிழ் மக்களின் மனித உரிமைகளை அப் பட்டமாக மீறும்வகையில் மக்களுக்கு அவலத்தினையும் துன்பத்தினையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்கு தல் சம்பவத்தினை நாம் மிகவும் வன்மை யாகக்கண்டிக்கின்றோம் என கூட்டமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளின்...

செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. இவர் அமெரிக்காவிலுள்ள பிரபல மருத்துவர்கள், வர்த்தகர்கள் எனப்பலருடன் தொடர்புபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கையில் மனித...

தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டியில் அனைத்துலக மன்னிப்புச் சபை பிரசாரம் செய்து வருகின்றது.

இந்த பிரசாரத்திற்கு எதிராக இலங்கை அரசு கருத்து வெளியிட்டு வரும் நிலையில் பிரித்தானியாவின் மூன்றாவது பெரும் கட்சியான தாராண்மை வாத ஜனநாயகக் கட்சி சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாராண்மைவாத ஜனநாயகக் கட்சியின் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜாத் கறீம்சேறா, லுட்பேட் மற்றும் லிஸ் லின்ணி ஆகியோர் ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கு இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர். (ச-5)

## புங்குடுதீவில் மீட்கப்பட்ட...

மாதிரிகளை சேகரிப்பதற்கான அனுமதியினை ஊர்காவற்றுறை நீதிமன் றத்தில் பெற்றுள்ளனர்.

ஏற்கனவே இச் சடல எச்சம் வணக்கத்திற்குரிய பங்குத்தந்தை ஜிம்புறவுணினுடையது என்ற சந்தேகத்தின் பேரில் அவருடைய தந்தையும் தாயும் முல்லைத்தீவில் இருந்து அழைக்கப்பட்டு இராகம வைத்தியசாலையில் அவர்களுடைய இரத்த மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

இதற்குள் பங்குத் தந்தையின் உதவியாளரான நாவாந்துறையைச் சேர்ந்த வின்சன் விமலதாசனுடையது என்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையினூடாக அவரது தந்தையாரினதும் சகோதரிகளினதும் இரத்தமாதிகள் சேகரிக்கப்பட்டு இராகம வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. இந் நிலையில் பங்குத்தந் தையின்பெற்றோரின் இரத்த மாதிரியும் அவரின் உதவியாளரது உறவினரின் இரத்த மாதிரியும் ஒரே தடவையில் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட விருப்பதாக குற்றப் புலனாய் வுத் துறையினர் ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸியிடம் அறிவித்துள்ளனர். (ச-3)

**யாழ்ப்பாணக் கல்லூரி**

JAFFNA COLLEGE · 1823 · CEYLON · 1872

*2009-உயர்தர வகுப்புக்கு மாணவர்களைச் சேர்த்தல்*

**தூர இடத்து மாணவர்கள் உயர்தர வகுப்புக் கல்வியைத் தொடர**

01. விடுதி வசதிகள்
02. கல்லூரியிலேயே விசேட வகுப்புக்கள் சிறப்பு ஆசிரிய அணியினால் வழங்கப்படும்
03. நூல் நிலைய வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் வெளிவந்த கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் பிரதான பாடங்களில் குறைந்தது 4 ஏயும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளையும் கொண்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு: 2007 மே மாதம் 1-ம் திகதியன்று 18 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 04.05.2007**

(சி-031) அதிபர்

## கிளிநொச்சியில் நேற்று...

நடைபெற்ற வேளை இரா ணுவத்தின் மீது புதிய தாக்குதல்களை நடத் துவதற்காக புலிகளின் முக்கியஸ்தர்கள் அவ்விடத்தில் கூடியிருந்ததாக இராணுவத் திற்கு தகவல் கிடைத்திருந்ததாகவும் வான் வெளித் தாக்குதலுக்கு உள்ளாகிய அந்த இடம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாகவும் பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்த விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் கிளிநொச்சி நகரிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள திருவையாறு என்ற இடத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் நடத்தப்பட்டதாகவும் இதில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்ததாகவும் கிளிநொச்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீசப்பட்ட குண்டு கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பல நோயாளிகள் பயந்து வெளியேறியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதேவேளை இவ்வாறான குண்டு வீச்சுக்களினால் மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்ச உணர்வானது அவர்களை உளவியல் ரீதியாக பெரிதும் பாதித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சதானந்தன் கூறியுள்ளார். (ச-5)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு...

விடுதலைப்புலிகள் பலாலி இராணுவத் தளம் மீது மேற்கொண்ட விமானத்தாக்குதல்,வட பகுதி யை நோக்கி பாரிய படை நடவடிக்கைக்கு இராணு வம் தயாராகி வருவதாக வெளி யாகும் தகவல்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இணைத் தலை மை நாடொன்றின் தூதரக உயர் அதிகாரி ஒருவரே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவ் அதிகாரி மேலும் கூறிய தாவது, இலங்யையில் மோதல்கள் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவதில் இணைத் தலைமை நாடுகள் அதிக ஆர்வம் கொண்டுள்ளன. சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் முதலில் இரு தரப்பும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

நோர்வே அனுசரணையாளர்களின் பெரும் முயற்சியால் உருவான போர் நிறுத்த ஒப்பந்தம் அதன் தொடர்ச்சியான சமாதான நடவடிக்கைகளுக்கு இணை த்தலைமை நாடுகள் பூரண ஆதரவை நல்கின.

அச் சமாதான சூழல் குழப்பமடைந்ததற்கு அதில் சம்பந்தப்பட்ட இரு தரப்புமே பொறுப்பாகும். எனவே தற்போது தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து மீண்டும் அமைதிச் சூழலை ஏற்படுத்துவது இரு தரப்பையுமே சார்ந்ததாகும். மோதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுதல், பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள், இடம்பெயர்ந்த மக்கள் தொடர் பாக இணைத் தலைமை நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன என்றார். (எ-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.